₹20 (தமிழ்நாடு, புதுச்சேரி)
₹22 (மற்ற மாநிலங்களில்)
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்

# நாணயம் விகடன்

29.9.13

பணத்தைப் பெருக்கும் தாரக மந்திரம்

தங்கநகை அடமானம்...

**ஆர்.பி.ஐ. புது நெருக்கடி!**

ரியல் எஸ்டேட் ஸ்பெஷல்



ரியல் எஸ்டேட்...


## விலை வீழ்ச்சி அபாயம்!

ஓர் அதிரடி ரிப்போர்ட்...

## கோல்டு இ.டி.எஃப், கோல்டு ஃபண்டு.

# நீண்ட காலத்திற்கு எது சரி?





**? கோல்டு இ.டி.எஃப்.க்கும், கோல்டு ஃபண்டுக்கும் என்ன வித்தியாசம்? நீண்ட கால முதலீட்டிற்கு எது சிறந்ததாக இருக்கும்?.**

- தனலஷ்மி, விழுப்புரம்.

**யூ.என்.சுபாஷ்,** நிதி ஆலோசகர்.

"இரண்டுமே மியூச்சுவல் ஃபண்ட் என்கிற கேட்டகிரிக்குள் வந்தாலும், கோல்டு இ.டி.எஃப்.-ல் குறைந்தபட்சம் ஒரு யூனிட்டாகதான் முதலீடு செய்ய முடியும். (சில ஃபண்டுகளில் அரை கிராம் யூனிட்கூட வாங்கலாம்!) இ.டி.எஃப்.-ல் ஒரு யூனிட் என்பது ஏறக்குறைய ஒரு கிராம் தங்கத்தைக் குறிக்கும். அதாவது, அதன் மதிப்பு ஒரு கிராம் தங்கத்தின் விலையாக இருக்கும். இதில் முதலீடு செய்ய டீமேட் கணக்கு அவசியம் தேவை. அத்துடன் பங்குச் சந்தையைப்போலவே வர்த்தகம் ஆகும் என்பதால் நிமிடத்திற்கு நிமிடம் விலை ஏற்ற இறக்கம் இருந்துகொண்டே இருக்கும். எஸ்.ஐ.பி. வசதி இல்லை. நிர்வாகக் கட்டணம் சுமார் 1 சதவிகிதம். டீமேட் நிர்வாகக் கட்டணம் ஆண்டுக்கு 250 - 500 ரூபாய் வரை இருக்கும். இதுபோக இ.டி.எஃப். வாங்கும்போதும், விற்கும் போதும் புரோக்கரேஜ் கட்டணம் இருக்கும். இது 0.25-0.5%.

ஆனால், கோல்டு ஃபண்டில் 500, 1,000 என உங்கள் வசதிக்கு ஏற்ப எவ்வளவு ரூபாய்க்கு வேண்டுமானாலும் முதலீடு செய்யலாம். ஒரு யூனிட் என்ற கணக்கு இல்லை. இதற்கு டீமேட் கணக்கு தேவையில்லை. பான் கார்டு இருந்தால் போதும். தினமும் ஃபண்டின் என்.ஏ.வி. விலையில் வாங்கலாம், விற்கலாம். எஸ்.ஐ.பி. வசதி உண்டு. ஃபண்டின் நிர்வாகக் கட்டணம் 2-2.5 சதவிகிதம் வரை இருக்கும்.

லட்சக்கணக்கில் பணத்தை முதலீடு செய்யப் போகிறீர்கள் எனில் கோல்டு இ.டி.எஃப்., ஆயிரக் கணக்கில் என்றால் கோல்டு ஃபண்ட் சிறந்ததாக இருக்கும்."

**? நான் லைஃப் இன்ஷூரன்ஸ் பாலிசி எடுத்துள்ளேன். அதனுடைய ரிஸ்க் கவரேஜ் எப்போதிலிருந்து தொடங்கும்?.**

- சூர்யா, சென்னை.

**நிரஞ்சனா,** பிராந்திய மேலாளர், எல்.ஐ.சி.

"லைஃப் இன்ஷூரன்ஸ் பாலிசியில் நீங்கள் பாலிசி எடுத்த முதல் நாளிலிருந்தே கவரேஜ் ஆரம்பித்துவிடும். இதில் ஹெல்த் இன்ஷூரன்ஸ் பாலிசியைப்போல காத்திருப்புக் காலம் கிடையாது."

**? என் நிறுவனத்தில் வீட்டு வாடகைக்காக குறிப்பிட தொகையை மாதந்தோறும் தருகிறார்கள். ஆனால், நான் சொந்த வீட்டில் இருக்கிறேன். இந்த வாடகை தொகைக்கு வரிச் செலுத்த வேண்டுமா?**

- முகேஷ், அடையாறு.

## கேள்வி-பதில்



யூ.என்.சுபாஷ்



நிரஞ்சனா



ஸ்ரீகாந்த்



சுதா ஸ்ரீதர்



ஏ.முருகன்



சொக்கலிங்கம் பழனியப்பன்


**போன் மூலமாகவும் கேள்வி கேட்கலாம்!**

இனி நீங்கள் போன் மூலமாகவும் கேள்விகளை பதிவு செய்யலாம். அதற்கு 044 66802920 என்ற எண்ணுக்கு டயல் செய்யுங்கள். கணினி குரல் வழி காட்டும்; அதன்படி உங்கள் குரலிலேயே கேள்விகளை பதிவு செய்யுங்கள். எதிர்முனையில் உங்களுடன் உரையாட யாரும் இருக்க மாட்டார்கள். எனவே, அந்த ஒரு நிமிடம் முழுக்க முழுக்க உங்களுக்கே!


**ஸ்ரீகாந்த்**, ஆடிட்டர்.

"வீடு உங்கள் பெயரில் இருந்தால், நிறுவனம் தரும் வாடகை தொகைக்கு கட்டாயம் வரிச் செலுத்த வேண்டும். உங்கள் வருமான வரி வரம்பு விகிதத்துக்கு ஏற்ப வரிச் செலுத்தவேண்டும். ஆனால், வீடு உங்களின் மனைவி, பெற்றோர் என வேறு யாராவது பெயரில் இருந்தால், நீங்கள் அவர்களுக்கு வாடகை தருவதுபோல காண்பித்து அந்தத் தொகையில் 50 சதவிகிதம் வரி விலக்கு பெறலாம். ஆனால், இந்த 50 சத விகித தொகையிலிருந்து உங்கள் சம்பளத்தின் 10 சதவிகிதத் தொகையைக் கழித்துக்கொண்டு மீதமுள்ள தொகைக்குதான் வரி விலக்கு பெற முடியும். அதாவது, உங்களின் சம்பளம் 50,000 ரூபாய் என்றும், உங்களின் நிறுவனம் வீட்டு வாடகை படியாக மாதம் 10,000 ரூபாய் தருகிறார்கள் என வைத்துக்கொள்வோம். உங்கள் மனைவி அல்லது பெற்றோருக்கு மாதம் 15,000 ரூபாய் வாடகை தருவதாக வைத்துக்கொள்வோம். வாடகையில் 50 சதவிகித தொகை எனில் 7,500 ரூபாய். உங்களின் சம்பளத்தில் 10 சதவிகிதம் எனில் (50000X10/100) 5,000 ரூபாய் வரும். இந்த தொகையை 7,500 ரூபாயிலிருந்து கழித்தால் (7,500 - 5,000) 2,500 ரூபாய் கிடைக்கும். உங்கள் நிறுவனம் தரும் வீட்டு வாடகை படியான 10,000 ரூபாயிலிருந்து இந்த 2,500 ரூபாயைக் கழித்துக்கொண்டு மீதமுள்ள 7,500 ரூபாய்க்கு வரிச் செலுத்தினால் போதும்."

**? வருமானச் சான்று தர இயலாதவர்கள் (சிறுதொழில் செய்பவர்கள், டிரைவர், தினக்கூலி) டேர்ம் இன்ஷூரன்ஸ் எடுக்க முடியுமா?**

- விஜய்குமார்,

**சுதா ஸ்ரீதர்**, ஐ.சி.ஐ.சி.ஐ. லைஃப் இன்ஷூரன்ஸ்.

"வருமானச் சான்று தர இயலாதவர்களும் டேர்ம் இன்ஷூரன்ஸ் எடுக்க முடியும். அவர்கள் தங்களுடைய வங்கிக் கணக்கு விவரத்தை வருமானத்திற்கான ஆதாரமாகக் காண்பிக்கலாம். இதன்மூலமாக அவர்களின் பணவரத்து எப்படி

www.vikatan.com

உள்ளது என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். இப்படித்தான் சிறு வியாபாரிகள் பலரும் டேர்ம் இன்ஷூரன்ஸ் எடுக்கிறார்கள். எனவே, கம்பெனிகளில் வேலை செய்யாதவர்கள் தங்களின் வங்கிக் கணக்கு மூலமாக அனைத்து பணப் பரிவர்த்தனைகளை அதிகம் செய்வது நல்லது. இதுவும் இல்லாதவர்கள் டேர்ம் இன்ஷூரன்ஸ் எடுப்பது கடினம்."

**? ஜீரோ பேலன்ஸ் மியூச்சுவல் ஃபண்ட் ஃபோலியோவைப் பயன்படுத்தி மீண்டும் முதலீடு செய்ய முடியுமா?**

- ரம்யா, திருநெல்வேலி.

**ஏ.முருகன்,** மண்டல இயக்குநர், புளூசிப் கார்ப்பரேட் இன்வெஸ்மென்ட் சென்டர்.

"ஜீரோ பேலன்ஸ் ஃபோலியோ எண்ணில் தொடர்ந்து முதலீட்டை மேற்கொள்ள முடியும். ஃபோலியோ எண் என்பது உங்களின் வங்கிக் கணக்கு எண் போலதான். இது உங்களின் அடையாளத்திற்காக மட்டும்தான். மூன்று வருடத்திற்குள் எனில் நீங்கள் எந்தவிதமான கே.ஒய்.சி. ஆதாரங்களும் தராமல் அதே ஃபோலியோ எண்ணில் முதலீடு செய்யலாம். முகவரி மாறி இருந்தால் அதற்கான ஆதாரத்தைத் தரவேண்டும்."

**? நான் சமீப காலமாக பங்குச் சந்தையில் முதலீடு செய்து வருகிறேன். ஒரு நிறுவனத்தின் பணவரத்து மற்றும் உள்ளார்ந்த மதிப்பை ஏன் கவனிக்கவேண்டும் என்பதை விளக்கவும்.**

- பாலகுமார்,

**சொக்கலிங்கம் பழனியப்பன்,** பிரகலா வெல்த் மெனேஜ்மென்ட்.

"ஒரு நிறுவனத்தில் சம்பளம், மூலப்பொருள், இதர செலவுகள் என பல செலவுகள் இருக்கும். மேலும், உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதன் மூலமாக கிடைக்கும் வருமானம் எவ்வளவு என்பதையும் பணவரத்தின் மூலமாகத்தான் கண்டுபிடிக்க முடியும். பணவரத்து இல்லை எனில் அதிகமாக கடன் வாங்கவேண்டி இருக்கும். அதோடு, வெளியிலிருந்து வரவேண்டிய பணம் எவ்வளவு என்பதும் தெரியாமலே இருக்கும். ஒவ்வொரு மாதமும் பணவரத்தின் மூலமாகத்தான் எவ்வளவு பொருட்கள் விற்பனையாகி உள்ளன, லாபம் எவ்வளவு என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். எனவே, பணவரத்தை அவசியம் கவனிக்க வேண்டும். இதுதான் ஒரு நிறுவனத்தின் சுவாசம் போல.

ஒரு நிறுவனத்தின் உள்ளார்ந்த மதிப்பு என்ன என்பதைப் பலவழிகளில் தெரிந்துகொள்ள முடியும். அதாவது புத்தக மதிப்பு, பி/இ மதிப்பு, பணவரத்து ஆகியவற்றின் மூலமாக தெரிந்துகொள்ள முடியும். நிறுவனத்தின் சந்தை மதிப்பு என்பது எவ்வளவு வேண்டுமானாலும் இருக்கலாம். இந்த மதிப்பு சரிதானா என்பதை அந்த நிறுவனத்தின் உள்ளார்ந்த மதிப்பின் மூலமாக மட்டும்தான் தெரிந்துகொள்ள முடியும். உள்ளார்ந்த மதிப்பு என்பது ஒரு பொருளுக்கு நாம் கொடுக்கும் நியாயமான விலை போன்றது. இந்த விலைக்கு அல்லது அதைவிட குறைவான விலைக்கு பங்குகளை வாங்கினால்தான் லாபம் பார்க்க முடியும். உள்ளார்ந்த மதிப்புக்கு குறைவாக வாங்கினால் நஷ்டத்தைத் தவிர்க்கலாம். உதாரணத்திற்கு, 2007-08-ம் ஆண்டுகளில் இன்ஃப்ரா துறை இனிவரும் காலங்களில் நல்ல வளர்ச்சி அடையும் என எண்ணி பலரும் அந்தத் துறை பங்குகளை அதிக விலைக்கு வாங்கினார்கள். அவர்கள் வாங்கியது சந்தை மதிப்பில். உள்ளார்ந்த மதிப்பை பார்த்திருந்தால், அந்தப் பங்குகளை வாங்கி இருக்கவே மாட்டார்கள்".

**கேள்விகளை அனுப்புகிறவர்கள் தங்கள் செல்போன் எண்ணையும் குறிப்பிடவும்.**

அனுப்ப வேண்டிய முகவரி:
கேள்வி-பதில் பகுதி, நாணயம் விகடன்,
757, அண்ணாசாலை, சென்னை-2.
nav@vikatan.com.

www.vikatan.com